SUPPLEMENT TO THE CATHOLIC GUARDIAN

# சத்தியவேதபாதுகாவலன்

PAUPERES EVANGELIZANTUR

UNITAS SPIRITUS IN VINCULO PACIS

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது விரர்த்தம்"

74-ம் புத்தகம் 19-ம் இல. யாழ்ப்பாணம் 1949-ம் ஆண்டு வைகாசி மாசம் 19-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 10

# துணை ஆயர் அபிஷேக இதழ்

பெருமாண்புமிக்க - அருளப்ப (யோண்)
கியோமார் ஆண்டகையே! போற்றி!
துணை ஆயர் தந்ததாயனே! போற்றி!!
யாழ்ப்பாண இராசகோபாலனே! வாழி! வாழி!
நின் ஆட்சி மிகமாண்பு மிக்கது!
நின் புகழ் மேலும் ஓங்குக!!



மிகமேன்மைதங்கிய டக்றர் J. A. கியோமார், O. M. I.
யாழ்ப்பாண மேற்றிராணியார்



மிகவந். J. எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.
துணை மேற்றிராணியார், யாழ்ப்பாணம்.

யாழூர், முதற்தமிழ் ஆயரான
எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையே! வருக!
சத்தியமறையின் தமிழ்க்கோமகனே! வருக! வருக!!
தங்களை வாழ்த்துகிறோம்! வாழி! வாழி!!
தங்களைப் போற்றுகிறோம்! வாழி! நீடூழி!!

**வாழி! நீடூழி!! பல்லாண்டு!!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியக்ஷர் அபிஷேக வைபவத்தின்

# உள் அடக்கம்

சு. அ.

புராதனகாலத்திலே உலகசுற்றுப் பிரயாணி ஒருவர், தாம் ஆபிரிக்காவில் கண்ட ஒருஅபூர்வமான விருட்சத்தைப்பற்றி எழுதியுள்ளார். அந்தத்தரு நூறுவருடத்துக்கு ஒருக்கால் மாத்திரம்புட்பிக்குமாம். புட்பங்களோ வெகுநாட்களுக்கு வாடாமல் மலர்ந்து வெகுதூரத்துக்கு வாசனைவீசிநின்று ஈற்றிலே மனிதருடைய ஆயுளைப் பெருக்கக்கூடிய ஆச்சரியகரமான கனிகளைக் கொடுக்குமாம். அதேபோன்று சென்ற நூறு ஆண்டுகளாக அமலோற்பவநாயகி பரித்தியாகிகளின் தியாகமே நிறைந்த அயராததொண்டினால், நமது தாய்நாட்டிலேதிருச்சபைஎனும்விருட்சம், நித்தியசீவியவழியிலே நாம் அயராதுநடக்கப் பெலனைத்தந்து உதவக்கூடிய ஒருஅபூர்வமான கனியைத் தந்திருக்கின்றது. அதையிட்டுச் சென்றபாதுகாவலனிலே சற்றுச் சொன்னோம். பரிசுத்தமும் பரித்தியாகமும்தேங்கஎங்கள்மத்தியில்சீவித்த அந்தஅரிய குருமுனிவர்களின் தொண்டைப் பாரபரன் தற்போது எங்கள் மத்தியில், ஒருஅத்தியட்சரை எழுப்புவதன்மூலம்,விரிகதிர்மணிமுடிக்கிரீடம் சூட்டத் திருவுளங்கொண்டார். அவருக்கே என்றும் எங்கள்தாழ்மையான ஸ்துதி.

எங்கள் பிதாக்களுக்கு இவ்விதமான சம்பவத்தைக்கண்டு மகிழும்பாக்கியம் எய்தவில்லை. ஆனல் அடியாராகிய எங்கட்கு எய்தியதே பாக்கியம். இம் மகத்தானசம்பவம் யாழ்ப்பாணத்திற்கு மாத்திரமன்று, உலகம் எங்கணுமே பரம்பியிருக்கும் சத்தியகத்தோலிக்க திருச்சபை முழுவதற்குமே மகாமுக்கியம்வாய்ந்த சம்பவமாமே.

வருகிற ஞாயிறுவாரம் யாழ்ப்பாணக் குருக்களுள் முதன்மைவாய்ந்தவரான வண. டக்றர் எமிலியானுஸ்பிள்ளை அடிகள் இந்த மேற்றிராசனத்துக்கு துணைமேற்றிராணியாராக அபிஷேகம்பண்ணப்படுவார். அத்திருச்சடங்கின் உள்ளடக்கத்தைச் சற்றாகிலும் அறிய விரும்புவோர், அதை விளக்கிச் சூசையப்பர் அச்சியந்திரசாலையிலே அச்சேற்றப்பட்டிருக்கும் கைநூலைக் கவனமாய்ப்படித்தல் தகும். யானும் இதன்கீழ் சிலகுறிப்புகளை எழுதப் பணிவாய்வேண்டுகின்றேன்.

முதன்முதல் இத்திருச்சடங்கு இன்றுநேற்று நடந்த ஒருசாதாரணமான சம்பவத்தைக் குறிப்பதல்ல. ஆனல் 1900 ஆண்டுகளின் முன் உயிர்த்தெழுந்தருளிய கர்த்தர் கலிலேயாநாட்டிலேபுரிந்த பரமஇரகசியம் பொதிந்த ஒரு உன்னத சம்பவத்தின் முறியாத்தொடர்பைக் குறிக்கின்றது. "யோனுவின்குமாரனுகியசீமோனே நீ இராயப்பனுய்இருக்கின்றய்...... இந்தஇராயின்மேல் நான் என் திருச்சபையை ஸ்தாபிப்பேன்..." என்ற திருவசனங்களை எங்கள்மீட்பர் தாம்பாடுபட்டு மரிக்குமுன் சம்பேதுருவானவருக்குச் செப்பி இருந்தார். அவர்பாடுபட்டு மரித்து உயிர்த்தெழுந்தபின், கலிலேயாவிலே பலமுறையும் தம்மைத் தமதுசீஷர்களுக்குக் காண்பித்தார். அவர்கட்கு அவ்வேளைகளில் அவர்செப்பியதாவது:—"பரலோகத்திலும் பூலோகத்திலும் நமக்குச் சர்வாதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கின்றது" ... "ஜெருசலேம்தோடக்கம் சமஸ்த மனுக்குலத்தோருக்கும் நமது நாமத்தினல் போதியுங்கள்......பூமியின் கடைசிஎல்லைவரைக்கும் நீங்கள் எனக்குச் சாட்சிகளாய்இருங்கள்" என்று எங்கள்ஆண்டவர் தமது அப்போஸ்தலருக்குக்கொடுத்த, அதிகாரத்தினதும், கற்பனையினதும் பேரொலி, அத்தியட்சரின் அபிஷேக வைபவத்தின்போது, பூமியினின்று வானமட்டாய் உலகமெங்கணும் தொனிக்கும். ஆகவே, முறியாத தொடர்பாகப்பூட்டியிருக்கும் பொற்சங்கிலித்தொடர்பிலே இந்தத் திருஅபிஷேகமும் ஒரு தளராதகோவை.

அபிஷேகம்பண்ணும் மூன்றுமேற்றிராணிமார்களும், அபிஷேகம்பண்ணப்படுபவரின் தலைமேல் தங்கள்பூசித கரங்களைவைத்து: "இஸ்பரீத்துசாந்துவானவரைப் பெற்றுக்கொள்ளுவீராக"—Accipe Spiritum Sanctum—என்றுசொன்னவுடனே அத்தியட்சபதவிக்கு உயர்த்தப்படப்போகிறவர், பரிசுத்தஆவியானவரினல் நிரப்பப்பட்டு, பரிபூரணகுருவுக்குரிய சகலதத்துவங்களினலும் அலங்கரிக்கப்பட்டு, தேவஞானத்தினல் நிரப்பப்பட்டுத் திருச்சபையின் இராசகுருப்பிரசாதிகளுள்ஒருவராகி, யேசுஇரட்சகரின்மந்தையை மேய்க்கும் உன்னத மேன்மையும், அதிகாரமும் பூண்டவராகி, ஒரேசொல்லில் எங்கள் ஆண்டவரின் அப்போஸ்தலகூட்டத்துள் ஒருவராகின்றார். "நாமே வழியும், சத்தியமும், சீவியமும்" என்றுமொழிந்த கர்த்தரின் மனத்தை அறியவும், அவருடையபோதனைகளைப் படிப்பிக்கவும் அவருடையசத்தியத்தைப் பரப்பவும் அதிகாரத்தைச்செலுத்தவும், கட்டவும், அவிழ்க்கவும், அணைக்கவும், அடிக்கவும், மந்தைகளை மேய்க்கவும், போஷிக்கவும் காக்கவும், இதயங்களைச் சுத்தம்பண்ணி அவைகளை "மாற்றிப் பிறக்க"வைக்கவும், தூயமறையினல் அவைகளை அர்ச்சித்துப் பாரகதிமார்க்கமாய்க் கொண்டுசெல்லவும்—இவைமுதலான அப்போஸ்தலருக்குரிய சகலஅதிகாரங்களையும் பரிபூரணமாய்ப் பூண்டவர் ஆகின்றார். உண்மையாகவே, பரிசுத்தஸ்தானத்தின் கண்டிப்பானகட்டளை இல்லாதுவிடில், எந்தமனிதன்தான் இந்தப் பயங்கரமும் பாரதூரமுமான பொறுப்பை ஏற்றுக்கொள்ளுவான்? உன்னதங்கட்கு உயர்த்தப்படும் அத்தியட்சரின் தோள்மேல்வைக்கப்படும் சிலுவை மெய்யாகவே யேசுஇரட்சாபெருமான் கல்வாரிமலைக்குச் சுமந்துசென்ற பாரமானசிலுவையேயம். மாணிக்குமட்டுமே அத்தைஅவர் தாங்கிச்செல்ல வேண்டியவராகின்றார்.

இத்திருச்சடங்கை இன்னொருவிதமாக நோக்கும்போது எங்கள் திருச்சபையின் மேற்றிராணிமாரின் கூட்டமும், சென்ற 1900 ஆண்டுகளாக ஒரே தலைவரின்கீழ் அந்த மேலானசபை ஆற்றிவந்த உன்னத தொண்டையும், சத்தியமறையின் உச்சிதமானபரிசுத்த முறைமையையும், கல்லின்மேற் கட்டப்பட்டு உலகமுடிவு பரியந்தம் அழியாது இருக்க ஆண்டவர் அதற்குக்கொடுத்த வரத்தையும் அது ஐயந்திரிபின்றித் தெளிவாக நமக்குப் புலப்படுத்திவிடுகின்றது:—"இதோ உலகமுடிவுபரியந்தம் நாம் என்றும் உங்களோடு இருக்கின்றேன்"(மத்.XXVIII.20) "அவருடையஇரட்சணியத்துக்கோ ஒருபோதுமே முடிவுஇராது" (லூக். 1—33). உலகசரித்திரத்தைச் சித்த சமாதானமாய் ஆராயும்எவனும் இவைகளில்அடங்கிய உண்மையை ஏற்றுக் கொள்ளுவான்.

சென்ற 1900 ஆண்டுகளுள் கெட்டழிந்துபோன மன்னாதிமன்னர்கள் எத்தனைபெயர்? புரண்டுருண்டிடிந்து சிதைந்த அரசர் சிம்மாசனங்கள் எத்தனை? தூசியாய்ப் பறந்துபோன இராசதானிகள் எத்தனை? புகைபோல மறைந்துபோன சாதிசனங்கள் எத்தனை? மாற்றமே உருவான இந்த உலகத்தின் மத்தியிலே, யாதொரு மாற்றமுமின்றித் தொடங்கியகாலந்தொட்டு இன்றுமே நிலவிநிற்கும்—காட்சிஆகமத்திலே கூறப்பட்ட தேவதூதனைவர் "காலம்முடிந்தது", என்று எக்காளதொனியுடன் கூறுமட்டும், என்றுமே நிறுவிநிற்கப் போகும்—அசைவற்ற ஸ்தாபனம் ஒன்றேஒன்று. அதுதான் பேதுரு என்னும் கல்லின்மேற்கட்டப்பட்டிருக்கும் சுத்தசத்தியகத்தோலிக்கதிருச்சபை. ஆயிரம் ஸ்தாலின்கள்திரண்டாலும் அது அழியப்போவதுமல்ல, அசையப்போவதுமல்ல. 'இந்தக்கல்லின்மேல் விழுபவனே நொறுங்குண்ணுவான். ஆனல் இந்தக் கல்லுஎவன்மேல் விழுமோ அது அவனைத் தூள்தூளாக நொறுங்கடிக்கும் (மத். XX1—44)

தற்காலமோ மானிடகுலத்துக்கு ஆபத்துநிறைந்தகாலம். துன்மார்க்கமும் துர்ப்போதனைகளும் மலிந்தகாலம். சிருஷ்டி, தன்சிருஷ்டிகர்த்தரை மறந்தகாலம். எப்பக்கத்திலும் ஞானஅந்தகாரம்மண்டிய இருள். இக்கார் இருளைப்போக்க ஒரேஒரு ஒளிமாத்திரம்உண்டு. அது நமதுஅரிய சத்தியமறை. அந்தமறையினது ஒளியைப் பரப்பத் தற்போது எங்கள்மத்தியில் எழுப்பப்பட்டிருக்கும் பூசித அத்தியட்ச ஆண்டவர்அவர்களின் வெளிச்சம், அநேகாநேகவருடங்கட்கு எமது லங்காதுவீபத்திலே மங்காது பிரபைவீசத் தயாபர பாரபரன் இரங்குவாராக!

## கோமஸ்—ரோச் திருமணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் புகழுடன் விளங்கும் பிரபலகத்தோலிக்க குடும்பங்களில் உதித்த திரு. லீனஸ் கோமசுக்கும், ஸ்ரீமதி லீலியம்மாள் ரோச்சுக்கும் நாளது வைகாசிமீ 4-ந்திகதி புதன்கிழமை காலை, கொழும்பு, பம்பலப்பிட்டி, அர்ச். அமலோற்பவநாயகியின் தேவாலயத்தில் திருமணம் வெகு சிறப்பாய் நடைபெற்றது.

மணமகளின் தந்தை திரு. ஜே. எல். பி. ரோச் விக்டோரியா தூத்துக்குடியில் ஓர்பிரபல கத்தோலிக்க கனவான். இவர் சென்னை சட்டசபையிலும், புது டெல்லி அரசியல் நிர்ணயசபை ஆலோசனைக்கமிட்டியிலும் அங்கம் வகித்து வருகிறார். செவாலியர் ஐ. எக்ஸ். பெரைரா மணமகளின் தாய்மாமனாகும். மணமகனின் தந்தை இலங்கையில் வர்த்தகம்செய்யும் பரதகுலப் பிரமுகர்களில் ஒருவர். அன்றுதினம் அணியணியான பூங்கொத்துக்களால் ஆலயம் அழகுறவிளங்கியது. ஆலயமணிகள் ஒலிக்க, பெற்றோர், உற்றார் உறவினர், நண்பர்கள் புடைசூழ்ந்து நிற்க, யேசுசபை வண. சாமாசுவாமியவர்களைத் துணைவராகக்கொண்டு, யேசுசபை வண. பேசில்கொரைராசுவாமியவர்கள் திருமணச்சடங்கையும் திருப்பலிபூசையையும் நிறைவேற்றினர். பூசையின்போது, தூத்துக்குடி மேற்றிராணியாண்டவரவர்களின் சகோதரர் வண. கஸ்பார் ரோச் சுவாமியவர்கள் எழுதி அனுப்பிய பிரசங்கம், வண. கொரைராசுவாமியவர்களால் வாசிக்கப்பட்டது. வண. ரோச்சுவாமியவர்கள் மணமகளின் ஞானத்தந்தையாகவும், மணமகனுக்கு ஞானத்தீட்சை அளித்தவராகவும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. திருமண ஒப்பந்தத்தின் சாட்சிகளாய் செவாலியர் சிற்றம்பலம் ஏ. கார்டினரும், செனற்றர் ஜே. ஏ. டி. விக்டோரியாவும் கைச்சாத்திட்டனர்.

அதன்பின், திருமணத்தின்போது சமூகமளித்தவரனைவர்க்கும் "பாம்கோட்"மண்டபத்தில் உபசாரணை நடைபெற்றது. அவ்வமையம், இலங்கை செனற்சபையின் உபதலைவர் திரு. பெரிசுந்தரம் புதுமணத்தம்பதிகளுக்கு வாழ்த்துரைகூறினர். மணமக்களுக்கு வந்த ஏராளமான வாழ்த்துச் செய்திகளுள், இந்திய கவர்னர் ஜெனறலிடமிருந்தும், சென்னைப் பிரதமரிடமிருந்தும், பலமேற்றிராணிமார்களிடமிருந்தும் வந்தவை குறிப்பிடத்தக்கனவாகும்.

பள்ளிக்கூடப்
புஸ்தகங்கள் என்ருல்,
ம. வஸ்தியாம்பிள்ளை அன்சன்ஸ்
உங்கள் தேவைக்கு
வேண்டியவைகளைத்தரத்
தயாராயிருக்கின்றனர்.
இலங்கையிலுள்ள பிரபலபள்ளிக்கூடப் புஸ்தகங்களும் உபகரணங்களும், கத்தோலிக்க வேதஞான நூல்கள், செபப்புஸ்தகங்கள், செபமாலை, குருசு, சுரூபம் முதலியனவும் பெறக்கூடிய முதன்மையான இடம்.
பெரியதெரு, — யாழ்ப்பாணம்.
Phone 95.

## பாஸ்குத்திருநாளுக்குப்பின்வரும்

# ஐந்தாம் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு
(அரு. 16 : 23—30)

அந்தக்காலத்தில் யேசுநாதர் சீஷர்களை நோக்கிச் சொன்னதாவது: என் நாமத்தினல் பிதாவை ஏதாகிலும் கேட்பீர்களேயானல், அதை உங்களுக்குத் தந்தருளுவாரென்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். இற்றைவரையில் நீங்கள் என் நாமத்தினல் ஒன்றையும் கேட்கவில்லை. கேளுங்கள் உங்கள் சந்தோஷம் பூரணமாகும்படிபெற்றுக்கொள்வீர்கள். இவைகளை உங்களுக்கு உவமைகளாகச் சொன்னேன். இனி நான் உங்களோடு உவமைகளாய்ப் பேசாமல், என் பிதாவைக்குறித்து வெளிப்படையாய் உங்களுக்கு அறிவிக்கும் நேரம்வருகிறது. அந்நாளில் என் நாமத்தினல் கேட்பீர்கள். ஆயினும் நான் உங்களுக்காகப் பிதாவை மன்ருடுவேன் என்று உங்களுக்குச்சொல்லுகிறதில்லை. ஏனெனில், நீங்கள் என்னைச் சிநேகித்ததினலும், சர்வேசுரனிடத்தினின்று நான் புறப்பட்டேன் என்று விசுவசித்ததினலும் பிதாதாமே உங்களைச் சிநேகிக்கிருர். நான் பிதாவினின்று புறப்பட்டு உலகத்திற்கு வந்தேன்; மறுபடியும் நான் உலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்ருர். அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: இதோ! இப்போது வெளிப்படையாய்ப் பேசுகிறீர்; உவமை ஒன்றும் நீர் சொல்லுகிறதில்லை. யாவற்றையும் நீர் அறிந்திருக்கிறீர் என்றும், எவனும் உம்மைவினவ உமக்கு அவசரமில்லையென்றும் இப்போ அறிந்திருக்கிருேம். இதன் நிமித்தமே சர்வேசுரனிடமிருந்து புறப்பட்டீர் என்று விசுவசிக்கிருேம் என்ருர்கள். கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத் துணைமேற்றிராணியாரின்

# அபிஷேக விழா

## 22-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை ஆசனக்கோவிலில் நடைபெறும்

### முடிவான நடைமுறை விளக்கம்

1. வழமையான ஞாயிற்றுக்கிழமைப்பூசைகள் காலை 5, 5-30, 6 மணிக்கு நடைபெறும்.

### அபிஷேக பூசை

2. அபிஷேக பூசையில் பங்குபற்ற வருபவர்கள் காலை 6 மணி தொடக்கம் ஆசனக்கோவிலுக்குள் அனுமதிக்கப்படுவார்கள்.

3. ஆசனங்களுக்கு ஏற்கனவே சீட்டுகள்பெற்றுள்ளோர் 7 மணிக்குமுன்னதாகவே தங்கள் தங்கள் ஆசனங்களில் அமர்ந்துகொள்ளவேண்டும்.

(மஞ்சள் துண்டுபெற்றோர் பீடத்தின் வடபாகத்திலும், நீலத்துண்டு பெற்றோர் பீடத்தின் தென்பாகத்திலும் இடம் பெறுவார்கள்.)

4. ஆசனச்சீட்டில்லாதவர்கள் கோவிலின் நடுவே அமரலாம்.

### காலைச்சடங்கு

5. தெரிவுசெய்யப்பட்ட துணைமேற்றிராணியாரை, மேற்றிராணியார் மாளிகையிலிருந்து அழைத்துக்கொண்டு சுற்றுப்பிரகாரம் காலை 7-15 மணிக்குப் புறப்படும்.

6. சுற்றுப்பிரகார கிரமவரிசை: திருச்சிலுவை, பாப்பரசரின் பட்டவர்த்தனர், பூசைப்பரிசாரகர், சந்நியாச கூட்டத்தைச் சேர்ந்த சந்நியாச சகோதரர், குருமார், துணை ஆண்டவருடன் மற்றும் மேற்றிராணிமார்.

7. சுற்றுப்பிரகாரம் ஆசனக்கோவிலின் முகப்புக்கதவால் கோவிலுக்குட்பிரவேசித்து, கோவிலின் மத்தியபகுதிவழியேசென்று பலிபீடத்தை அடையும். (சுற்றுப்பிரகாரம் கோவிலுள் செல்லும்பொழுது விசுவாசிகளனைவரும் முழந்தாட்படியிட்டு மேற்றிராணிமாரின் ஆசீர்வாதத்தை அடைந்துகொள்வார்களாக.)

### பலிபீடத்தடியில்

8. மகாவந்தனைக்குரிய J. A. கியோமார் ஆண்டவர் (O. M. I.) அபிஷேகர்

,, ,, ,, N. M. லௌடாடியோ ஆண்டவரும் (S. J.)

,, ,, ,, எட்மன்ட் பீரிஸ் ஆண்டவரும் (O. M. I.) உதவி அபிஷேகர்கள்

### பிரசன்னமளிக்கும் பிறஆயர்கள்

9. அதிவந்தனைக்குரிய T. கூறே ஆண்டவர் (O. M. I.), கொழும்பு மாநகர் அதிமேற்றிராணியார்

மகாவந்தனைக்குரிய F. T. றோச் ஆண்டவர் (S. J.), தூத்துக்குடிமேற்றிராணியார்

,, ,, ,, B. றெஞ்ஞோ ஆண்டவர் (O. S. B.), கண்டி மேற்றிராணியார்

மொஞ்சிஞ்ஞோர் R. வாண்டன்புஸ் (S. J.), திரிகோணமலை மேற்றிராசனப் பரிபாலனர்

### பாப்பரசரின் பட்டவர்த்தனர்

செவாலியர்கள்: S. அருளானந்தம், டக்றர் W. A. E. கருணரத்ன, திவான்பகதூர் I. X. பெரைரா, சிற்றம்பலம் A. காடினர், H. A. ஹாமன்.

(அபிஷேகச் சடங்கின்பின் மேற்றிராணிமார் முன்வந்த மேரையாகத் திரும்பிச்செல்லுவார்கள். அப்பொழுதும் விசுவாசிகள் முழந்தாட்படியிட்டுப் புதியமேற்றிராணியாரின் ஆசீர்வாதத்தை அடைந்துகொள்வார்களாக.)

### மாலை—வரவேற்புபசாரம்

10. 4-00 மணிக்குப் புதிய மேற்றிராணியாரால் திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதம்

11. 4-30 மேற்றிராசனக் கத்தோலிக்க மக்களால் வாழ்த்துப் பத்திரமும், புதியமேற்றிராணியாருக்குப் பாததெட்சணையும்.

12. பாப்பரசர் வாழ்த்து

மன்னர்பிரான் வாழ்த்து

கொழும்பு வானொலிநிலையத்தார் அபிஷேக நிகழ்ச்சிகளை மனமுவந்து அகில உலகுக்கும் ஒலிபரப்ப ஏற்பாடு செய்துள்ளனர்.

அதிவண. T. M. F. லோங் சுவாமியார் அவர்கள் ஆங்கிலத்திலும், அதிவண. S. பீற்றர் சுவாமியார் தமிழிலும் நிகழ்ச்சிகளை விளக்குவார்கள்.

மாட்சிமைதங்கிய மகாதேசாதிபதி அவர்களின் பிரதிநிதியாக வடமாகாணத் தலைவர் P. J. ஹட்சன், C. C. S. அவர்களும்,

பிரதம மந்திரி கௌரவ D. S. சேனநாயக அவர்களின் பிரதிநிதியாக அவரது நிரந்தரக் காரியதரிசி K. வைத்தியநாதன், C. C. S. அவர்களும் சமுகமளிப்பார்கள்.

# அதிசயமிக்க அபிஷேக விழா

## யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மாபெரும் வைபவம் முதல்தமிழ்த் துணைஆயரின் மகுடாபிஷேக

## —— மங்கல விழா ——

1949-ம் ஆண்டு வைகாசிமாசம் 22-ந்திகதி ஞாயிறுவாரம் கதிரவன் தன் இளங்கதிர்களைப்பரப்பி எழும்பும் மங்கலநேரம். யாழ்ப்பாணத்திலே, முன்எப்போதும், எங்கேயும் நடந்திராத புனிதமான சமயப்பெருவிழா நடந்தேறவிருக்கின்றது.

இதோ! அன்று, யாழ்ப்பாணமேற்றிராசனத்தின் துணைமேற்றிராணியாராக அதிபூசித J. எமிலியானுஸ்பிள்ளை O. M. I., D. D., B. Sc. அவர்கள் அபிஷேகம் செய்யப்படுவார். சத்திய மறையின் புதியகோமகனாகப் பட்டஞ் சூட்டப்படுவார். சமயஇளவரசராக முடிசூட்டப்படுவார்.—இராசகுருப்பிரசாதியாகப் பதவியேற்றுப் பொற்செங்கோல் ஏற்றுக்கொள்ளுவார்.

யாழ்ப்பாணத்திலே மகாபிரமாண்டமானதாக வானளாவியதாகக் கட்டி எழுப்பப்பட்டுவருகிற கொஞ்சேஞ்சித்தாயாரின் மேற்றிராசன புதியஆலயத்திலே, அவ்வாலயத்துள் அமைக்கப்பட்டுத் தேசோமயமாய்க் காட்சியளிக்கும் பிரமாண்டமான பந்தரிலே இத் திருமங்கல வைபவம் நடந்தேறும்.

காலை 7-30 மணிக்குப் புதிய மேற்றிராணியார் பல குருக்களும் மேற்றிராணிமாரும் புடைசூழ, குருமார்நிவாசத்திலிருந்து திருச்சடங்குநிகழும் இடத்துக்கு அழைத்துவரப்படுவார். இவ்வைபவத்துக்குத் தற்போது இலங்கையிலிருக்கும் எல்லாமேற்றிராணிமார்களும் சமுகமாவார்கள். திரிகோணமலைமேற்றிராணியார் அவர்கள் தற்போது இலங்கையில்இல்லாததால் அம்மேற்றிராசனத்துப் பரிபாலனசுவாமியார்அவர்கள் சமுகமளிப்பார்கள். முதல்இந்தியதமிழ் மேற்றிராணியாராகிய மகாவந். தூத்துக்குடி T. F. றோச் S. J. ஆண்டவர்அவர்களும்சமுகமளிப்பார்கள். இலங்கையிலும் இந்தியாவிலுமாக 150க்குமேற்பட்ட குருப்பிரசாதிகள் இவ்வைபவத்திற்குப் பிரசன்னமாயிருப்பார்கள். பற்பல சந்நியாசசபைகளைச்சேர்ந்தவர்களாய்ப் பன்னூற்றுக்கணக்கான சந்நியாசிகளும், கன்னிகாஸ்திரிகளும் சமுகமாவார்கள்.

இலங்கை அரசாங்கசபைப்பிரதிநிதிகள் பலரும், மந்திரிமாரும் சமுகம்கொடுப்பார்கள். அரசாங்க உயர்தரத் தலைவர்களும், இராணுவத்தலைவர்களும், செனட்சபை அங்கத்தவர்களும், நிரந்தரக்காரியதரிசிகளும், தேசீயதலைவர்களும், சமூகப்பிரமுகர்களும் சமுகம் கொடுக்கவிருக்கின்றனர்.

பிறசமயத்தலைவர்களிற் பலர் சமுகந்தருவதற்கு அறிவித்துள்ளனர். சமுகமாகமுடியாதவர்கள் தங்கள்பிரதிநிதிகளை அனுப்பிவைப்பார்கள். இலங்கை முழுவதிலுமுள்ள கத்தோலிக்க நைற்பட்டவர்த்தனர்களாயுள்ள சிங்கள, தமிழ் செவாலியர்கள் எல்லோரும் தங்கள்பட்டத்து விருதுகளுடன் சமுகமாயிருப்பார்கள்.

பலஆயிரக்கணக்கான தமிழ், சிங்கள கத்தோலிக்கர்களும், பிறசமய அன்பர்களும் குழுமியிருப்பர். பத்திரிகை நிருபர்களும் வந்திருப்பார்கள். கொழும்பு கத்தோலிக்க இலக்கியசமாசத்தார்கூடி விசேஷமாய்ஒழுங்குசெய்யப்பட்ட விமானத்தில் இங்குவந்து சேருவார்கள். இத்துணைச்சனர்மத்தியில் புதிய ஆயரின் பட்டாபிஷேகத்திருச்சடங்கு நடைபெறும்.

யாழ்ப்பாணத்தில் தம் யூபிலிகண்டவராகிய அதிவந். கியோமார் ஆண்டவர்அவர்களே பிரதம அபிஷேகராயிருந்து திருச்சடங்கை நிறைவேற்றிவைப்பார்கள். காலிமேற்றிராணியாராகிய மிகவந். லௌடாடியோ ஆண்டவர் அவர்களும், முதல் இலங்கைச் சுதேசமேற்றிராணியாராகிய சலாபம் மிகவந். எட்மண்ட் பீரிஸ் ஆண்டவர்அவர்களும் துணைஅபிஷேகர்களாக இருப்பார்கள். இலங்கை அதிமேற்றிராணியார் அதிமிகவந். தொமஸ்கூறே ஆண்டவர்அவர்கள் பிரதான பார்வையாளராக இருப்பார்கள்.

அபிஷேகத்தின்போது யாழ்ப்பாணத்தின் எக்காளம் என்று புகழப்படும் அதிவண. S. பீற்றர் O. M. I., அவர்கள் பட்டமளிப்புப்பிரசங்கம் சொல்லுவார்.

அன்றுசாயந்தரம் 4 மணியளவில் புதியதுணைமேற்றிராணியாரால் மேற்றிராசனக்கோவிலில் நற்கருணை ஆசீர்வாதம் அளிக்கப்படும். பின் புதிய ஆயர் அவர்களுக்குப்பகிரங்கஉபசாரணை நடத்தப்படும். யாழ்ப்பாணமக்கள்சார்பாக மகிழ்ச்சிப்பத்திரிகை வாசித்துக் கொடுக்கப்படும். கத்தோலிக்கபாடசாலைமாணவர்களால் கட்டப்பட்ட ஞானப்பூச்செண்டுத் தெட்சணை வழங்கப்படும். கத்தோலிக்க பொதுமக்கள் பேரால் ஞாபகஉபகரிப்புக் கொடுக்கப்படும்.

பின்பு சம்பத்திரிசியார் விளையாட்டு மைதானத்திலே பரிமளமிக்க பொதுசன வரவேற்பு நடைபெறும். எல்லாச் சமூக—சமயத்தலைவர்களும், பிரமுகர்களும் இதிற் கலந்துகொள்வார்கள். பல பெரியோர்கள் புதிய ஆயருக்கு மங்களமும் மகிழ்ச்சியும் சமர்ப்பிப்பார்கள்.

### 102 வருஷவழக்கு

102 வருஷங்களுக்கு முன் குடும்ப நிலப்பிரிவினைபற்றிய தகராறு சம்பந்தமாக ராஜ்கோட்டில் (இந்தியா) நெடுநாளாக நடைபெற்றுவந்த வழக்கு இப்பொழுதுதான் ஒருமுடிவுக்குவந்துள்ளது. இந்தவழக்கு 4 தலைமுறைகளாக நடந்துவந்திருக்கிறது. வழக்கில் சம்பந்தப்பட்ட இரண்டு கட்சியினரும் தகராறு ஏற்பட்ட நிலத்தின் மதிப்பிலும் எவ்வளவோ கூடுதலான பணத்தைச் செலவுசெய்துள்ளனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த லூர்துமாதாவையும், சங். அல்போன்சா கன்னியாஸ்திரியையும் நினைத்து எனக்கு நற்சுகப்பிரசவம் கிடைக்க யேசுவின் திருஇருதயத்திடம் மன்றாடும்படி தினமும் மன்றாடிவந்தேன், என்மன்றாட்டு அனுகூலமானது. நேர்த்திப்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

M. J. S.


சத்தியவேத

# பாதுகாவலன்

1949-ம் ஆண்டு
வைகாசி மாசம் 19-ந் திகதி





## வாழ்க!
## எம் துணை ஆயர்

எமது யாழ்ப்பாணத் திருச்சபைச்சரித்திரத்திலே புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைக்கக்கூடியதும், மிகமகிழ்ச்சிக்கும் மதிப்புக்கும் உரியதுமான சம்பவம் அடுத்துவரும் ஞாயிறுவாரம் (22-5-49) நடைபெறஇருக்கின்றது. அன்று, அதிபூசித J. எமிலியானுஸ்பிள்ளை, O.M.I. ஆண்டவர் அவர்கள், எம்மேற்றிராசனத்தின் துணைமேற்றிராணியாராக அபிஷேகம் செய்யப்பட இருக்கின்றார்கள்.

இம்மங்கல செய்தியானது பொதுவில் இலங்கைக் கத்தோலிக்க மக்களுக்கும் சிறப்பாக யாழ்ப்பாணத் தமிழ்க்கத்தோலிககருக்கும் மட்டில்லாத—எல்லையில்லாத மனப்பூரிப்பைத் தருவதாயிருக்கும்.

இலங்கைத் தமிழ்க்குரவர் ஒருவர் முதல்முறையாக எம்சமயத் தலைவராக, நியமிக்கப்பெற்று, அபிஷேகிக்கப்பட்டு மேற்றிராணியார் என்னும் உன்னதமான பதவிக்கு உயர்த்தப்பட்டிருப்பதில் கத்தோலிக்க தமிழ்மக்களெல்லோரும் பூரிப்படைந்து குதூகலம் அடைவதற்கு நிரம்பிய நியாயம் இருக்கிறது. "இந்தியாவே! இலங்கையே உன்மக்களாலேயே உனக்கு ஈடேற்றம் உண்டாகும்" என்று எங்கள் பரிசுத்த பாப்பரசர் சொல்லியது எம்மேற்றிராசனத்தில் இதோ! இப்போது நிரூபணம் செய்யப்பட இருக்கிறது.

400 வருடங்களின்முன்னர் தான் எமது நாட்டில் சத்தியவேதம் பரவத்தொடங்கிற்று. அந்நாளில் எம்மேற்றிராசனமானது ஞான ஆளுகையில், இந்திய கொச்சி மேற்றிராசனத்தைச் சேர்ந்ததாயிருந்தது. 1836-ம் ஆண்டில் எம்நாடு பிரிக்கப்பட்டு மேற்றிராசனப் பதவிக்கு உயர்த்தப்பட்டது. மிகவந். பெற்றக்கினி ஆண்டவரே முதல் யாழ்ப்பபாண மேற்றிராணியாராகி ஆட்சி செய்து வந்தனர். இற்றைக்கு 100 வருடங்களின்முன்னே அமலோற்பவ மரியநாயகிசபையைச் சேர்ந்தவரான வந். செமேரியா ஆண்டவர்மேற்றிராணியாரானார். அவரைத் தொடர்ந்து மிகவந்தனைக்குரியவர்களான, கிறிஸ்தோப்பர் பொஞ்ஜீன், அன்டுறு மெலிசன், ஹென்றியூலன், அன்டுறு புரோ என்னும் ஆயர்கள் ஆட்சி புரிந்து வந்தனர். இப்போது கடந்த 25 வருடங்களாக எங்கள் அரியபெரிய கியோமார் ஆண்டவர் அவர்கள் ஆட்சிசெய்து வருகின்றார்கள். இவர்களின் நல் ஞானஆட்சி விருத்தியின் நல் அறிகுறியாகவும், அமலோற்பவ சபைப் பரித்தியாகிகள் ஆற்றிய தேவதொண்டின் நூற்றாண்டுப் பூர்த்தியின் விழாவாகவும், நம்மேற்றிராசனத்துக்கு ஒரு சுதேச துணைமேற்றிராணியார் கிடைக்கும் பெரும் சலாக்கியம் கிடைத்துள்ளது.

பரிசுத்தஸ்தானமானது அதிபூசித J. எமிலியானுஸ்பிள்ளை அவர்களை, யாழ்ப்பாண மேற்றிராசனத்தின் துணைமேற்றிராணியாராக நியமனஞ் செய்தானது அதன் அப்பழுக்கற்ற பரிசுத்த நிர்வாகத் திறனையும், ஞான அதிகார வன்மையையும் தெளிவாக்குவதாயிருக்கிறது.

எமக்கு ஒரு துணைமேற்றிராணியார் கிடைத்திருப்பதற்காக முதலில் எல்லாம்வல்ல எம் பெருமானுக்கு முழுநன்றித்துதியைச் செலுத்துவோம்! பின்பு பரிசுத்தஸ்தானத்துக்கு, மெய்ப் பணிவையும் வணக்கத்தையும் மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்ளுவோம்.

இச்சந்தர்ப்பத்தில், புதிய துணை ஆயர், எங்கள் அரிய பெரிய மேன்மைதங்கிய கியோமார் ஆண்டவருக்கு — துணைவராய் நியமிக்கப்பட்டதில் மட்டில்லா மகிழ்ச்சியும், எல்லையில்லா ஆறுதலும் கொள்ளுவதில் பெருமைப்படவேண்டியவர்களாகிறோம். ஆழ்ந்தவிவேகமும், ஆளுகைவன்மையும், ஞானகண்ணியமும் கொண்டுள்ள எம்கியோமார் ஆண்டவர் அவர்களின் முயற்சியினாலும், விருப்பினாலும், சிபாரிசினாலுமே எமக்கு ஒரு துணைஆயர் கிடைத்திருக்கின்றார் என்றால், இதுமுற்றிலும் உண்மையானதேயாகும். இவர்கள் முன்னெண்ணத்துடன் புதியஆயரை, ஏலவே பதவிகளில் நியமித்து, சீரியசமய ஆளுகையிற் பயிற்சி பெறச்செய்து, மேற்றிராணித்துவ பதவிக்குத் தகுதியுடையவராக்கிய தனிப்பெருமை எங்கள் கியோமார்ஆண்டவருக்கே உரியதாகும். புதியஆயரை அபிஷேகிக்கும் உரிமையும் எம்பெரிய ஆயருக்குக் கிடைத்திருப்பது இன்னும் ஒருமடங்கு மகிழ்ச்சியைத் தரத்தக்க செய்தியாகும். தாம் தெரிந்துகொண்ட ஒருகுருவானவரைத் தாமே பயிற்றி, தாமே அபிஷேகித்து, தாமே தமக்குத் துணைமேற்றிராணியாராக ஏற்றுக்கொள்ளும் மகிமையை எங்கள் மேற்றிராணியார் பெற்றிருக்கிறார் என்பதைப் பாராட்டாமலிருக்க முடியுமா? இதையிட்டு எங்கள் கியோமார் ஆண்டவர் அவர்களுக்கு எம் மேற்றிராசன மக்களின் குதூகலமிக்க மகிழ்ச்சியையும் சோபனத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். எங்கள் மாபெரிய அருளப்ப ஆண்டகையே! போற்றி! போற்றி!!

மொஞ்சிஞ்ஞோர் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை, O. M. I. அவர்கள், எங்கள் துணைமேற்றிராணியாராக ஏற்படுத்தப்பட்டிருப்பதை, ஏற்று, ஏத்திப் புகழ்ந்து பாராட்டாதவர்களும் உண்டோ? இவர்களுக்கு இயல்பாயமைந்துள்ள ஆற்றல் சக்திகள்தானென்ன? நம்சமயத்தை ஒளிரச்செய்வதில் இதுவரை எடுத்துக்கொண்ட ஊக்கம் தானென்ன? பிறசமயத்தவராலும், பிறசமூகத்தவராலும், அரசியல் ஞானிகளாலும், ஆள்பவர்களாலும், கல்விநிபுணராலும், மற்றும் பிரபலஸ்தரெல்லோராலும் அறியவும், மதிக்கவும் பட்டிருக்கும் மகிமைதானென்ன? எம்சத்தியமறையைத் துலங்கச் செய்து, மதஉரிமைகளைப் பெறுவதில், சாவதானமாகவும், சாதுரியமாகவும் வாதாடி, போராடி, நலம்பெறச் செய்த ஆற்றல்தானென்ன? மறைமுகமாகவும், நேர்முகமாகவும் நம்சமயத்தை எதிர்க்கும் நாசசக்திகளையெல்லாம், சூழ்ந்து,—அறிந்து,—தெரிந்து, அவை மேலுருவண்ணம் அடக்கிஎதிர்த்து ஒதுக்கிவைத்த வீரதீரம்தானென்ன? திருச்சபையின் கல்விச்சுதந்தரத்தை அபகரிக்க நினைந்தவர்களின் கர்வத்தைஅடக்கி, எமக்கு எப்போதும் போலுள்ள கல்விஉரிமையை நிலைநாட்டிவைத்த சாதுரிய தகைமைதானென்ன? மதசுதந்தரமும், கல்விச்சுதந்தரமும் கத்தோலிக்கரின் பிறப்புரிமை என்றும் அவற்றை எம்மிலிருந்து பிரித்தெடுக்க அரசினருக்கு உரிமை கிடையவே கிடையாது என்றும் பகிரங்கப்படுத்தி அவ்வுரிமைகள் பறிமுதலாக்கப்படாதபடி ஓயாது விழிப்புடனிருக்கும் விவேகம்தானென்ன? தாம் முன்பு பொறுப்பேற்ற கல்வி நிலையங்களை விருத்திசெய்த திறமைதானென்ன? சமயப்பாடசாலைகளை அபிவிர்த்தி செய்து, சமயக்கல்வியைப் பரவச்செய்து, பாடசாலைகள் முன்னேறச் செய்து, கத்தோலிக்க ஆசிரியர்களை ஒருங்கிணைத்து, அவர்களுள் முன்னணிப்படையை ஏற்படுத்தி வளம்பெறச்செய்த பேராற்றல்தானென்ன? நம் சமயவிர்த்திக்காக அரசியல் அனுசரணைகளைச் சாதகமாக்கி வைத்த வல்லபம்தானென்ன? அரசியல் வாழ்க்கையில் எம் மதத்துக்குரிய நல்லஇடத்தை நிர்ணயித்துவைத்த உறுதிதானென்ன? நம்மிடையே நடைபெற்ற நல்இயக்கங்களெல்லாவற்றிலும் முன்னின்று நடப்பித்து வெற்றி காணவைத்த சாதுரியந்தானென்ன? நம்சமயக்கோட்பாடுகளை வெளிப்படுத்தி, வெளியிட்ட அறிக்கைகள் எத்தனை? ஓயாது, உறங்காது, உழைத்து, நம்சமய அனுட்டானங்களைப் பகிரங்கமாகவும், சுதந்தரமாகவும் அனுசரிக்கத் தக்கதாய் வளமை உண்டாக்கிய வன்மைதானென்ன?

இம்மட்டுமா? நம்தமிழ் மக்களின் தற்கால நிலையைப் பரிசீலனைசெய்து அரசியலறிவில் தமிழ்த் தலைவர்களைப் பின்காணச்செய்து தமிழரின் வருங்கால நல்வாழ்விற்கு வழிகோலிய அரசியல் ஞானந்தானென்ன? மதவாழ்க்கையிலும் சமூகவாழ்க்கையிலும் உத்தமமானதை உய்த்துணர்ந்து மக்களின் சீவிய நிலையை உயர்த்துவதற்குப்பட்ட அரும்பாடுதானென்ன? சமூகரீதியில் தமிழரை மற்றும் சமூகத்தவருடன் நல்லிணக்கமாக வாழச்செய்வதில் எடுத்துக்கொண்ட உழைப்புத்தானென்ன? எடுத்தகருமத்துக்கு எத்துணை இடையூறு வந்தாலும், களைக்காமல், சளைக்காமல், மனமடிவுகொள்ளாமல் முடிவுகாணும் காரியசித்திதானென்ன? அழுவாரோடு அழுது மகிழ்வாரோடு மகிழ்ந்து, வேண்டியவர்க்கு வேண்டியபோது, வேண்டியஉதவியை வேண்டியவாறு செய்து பிரபல்யம் பெற்றிருக்கும் பெருமைதானென்ன? தேகஅலுப்பையோ, வேலைஇளைப்பையோ, வியாதிவருத்தத்தையோ, பிரயாணகஷ்டத்தையோ, இம்மியும் அசட்டைபண்ணாது தமக்கெனதாழாப் பிறர்க்குரியாளர் எனத் வயங்காது புகழக்கூடியவராய் இலங்கிவரும் பெட்புத்தானென்ன? ஆகாயத்திலும், தரையிலும் பறந்துசென்று, சேவைசெய்து, பறந்துசென்று சேவைபுரியும் அதிசயகுரவர் என்னும் பட்டப்பெயரைப் பெற்றிருக்கும் பெருமைதானென்ன?

மிஷன்கள், கல்வித்தாபனங்களின் தலைவராகவும், விக்கார் ஜெனறலாகவும், பரித்தியாகிகளின்சபைச் சிரேஷ்டராகவும், பாடசாலை முகாமைக்காரராகவும், மேற்றிராசன பரிபாலனராகவும் இருந்து ஆற்றிய அளவிறந்த—ஆற்றல்மிக்க—அரிய சேவைகள்தானென்ன? இவையெல்லாம் எமது துணைமேற்றிராணியாரின், திறமை, விவேகம், திடம், சாதுரியம், கைத்திறன், செல்வாக்கு, ஆளுந்திறன், அனுபவஞானம், என்பனவற்றை வெளிப்படுத்துவனவாயுள்ளன.

நல்வரங்களனைத்தையும் நயக்தளிக்கும் ஸ்பிரித்துசாந்து தேவனின் தெரிதலான கொடைகளால், நம்புதிய கோபாலர் நிரப்பப்பட்டுள்ளவர் என்று துணிந்து சொல்லலாம். மெய்யான சமாதானம்—சமரசம்—ஒற்றுமை—இணைப்பு—சித்தியெல்லாம் இஸ்பிரீத்துச்சாந்து தேவனாலேயே பூரணப்படும் என்பதை எம் துணைமேற்றிராணியார் எப்போதும் எங்கேயும் எண்ணிவந்ததினால் பயனாகவே இவ்வளவுமதிக்கவும் கணிக்கவும் சமாதானத்தின் பாலம் என அழைக்கப்படவும் கூடியவராயினர். ஆனதினாலேயே அவர், சமாதானபந்தனத்தில் ஆவியானவரின் ஐக்கியம் என்னும் விருதுவாக்கியத்தைத் தமது மகுடவசனமாகக் கொண்டிருப்பது மிகப் பொருத்தமானதாகும். தகுதியும் திறமையும் மிக்கவரான அதிபூசித ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அவர்கள் எம்துணை ஆயராய் வாய்க்கப்பெற்றமையிட்டு, கத்தோலிக்க மக்களெல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோரும் கட்டடங்கா மகிழ்ச்சி கொள்ளுகிறோம்! ஆனந்த நர்த்தனம் புரிகின்றோம் எல்லாம் வல்ல எம்பெருமான் புதியநல்லாயருக்கு எல்லா நலன்களையும் பூரணமாய்க் கொடுத்தருள வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

எம்புதிய ஆயரே! வருக! வருக!! உங்களை எம்துணை ஆயராய்ப் பெற்றது எம்பாக்கியமே! கியோமார் ஆண்டவருக்குத் துணைவராய் வந்தமை இன்னும் மேலானபாக்கியமே! எம்தலைவ! வாழி! வாழி! பல்லாண்டுவாழி!

கத்தோலிக்க பொதுமக்களெல்லாரின் சார்பாக—காவலன் புதிய முதற்தமிழ் ஆயருக்குத் தனது இருதயபூர்வமான வாழ்த்தையும் வணக்கத்தையும் சமர்ப்பிக்கிறது!



பரிசுத்த தந்தை பன்னிரண்டாம் பத்திநாதர்

சுதேச குருக்களை விருத்தியாக்கி, அவர்கள் செழிக்கவகைசெய்து, அவர்கள் சமயக்கலையிலும் உலகக்கலையிலும் மேலோங்க வைத்து, உயர்பதவிகள்தந்து, அவர்களில் ஒருவரான அதி பூசித. ஜெரோம் எமிலியானுஸ் பிள்ளை, O. M. I. அவர்கள் எமக்குத் துணைமேற்றிராணியாராக நியமனம்பெற வழிசெய்துவைத்தார்கள். இத்துடன் இவர்களே, துணை ஆயரை அபிஷேகிக்கும் பிரதமஆசாரியராக இருந்து திருச்சடங்குகளைநிறைவேற்றவும் ஒருப்பட்டுள்ளார்கள்.

இதை முன்னிட்டு நாமெல்லோரும், எம்அரிய அருளப்ப ஆண்டகை அவர்களுக்கு மிகுதியும் நன்றியும் கடமைப்பாடும் உடையவர்களாயிருக்கின்றோம்.

எங்கள் கருணைமிக்க அருளப்ப ஆண்டவர் அவர்களுக்கு, யாழ்ப்பாணமக்கள் சார்பாக—காவலன் வணக்கமிக்க சுபசோபனத்தையும் வாழ்த்துதலையும் தெரிவித்துக்கொள்ளுகின்றது.



மிகவங். டக்ரர் எட்மன்ட் பீரிஸ், O.M.I.
சலாப மேற்றிராணியார்



அதிமிகவங். டக்ரர் தோமஸ் கூறே, O.M.I
கொழும்பு அதிமேற்றிராணியார்



மிகவங். டக்ரர் N. M. லௌடாடியோ, S. J.
காலி மேற்றிராணியார்



மிகவங். டக்ரர் D. B. றெஞ்ஞோ, O.S.B.
கண்டி மேற்றிராணியார்

## அருளப்பஆண்டவரின்
# ஆட்சிப்பேறு

எமது அரிய ஆண்டகைஅவர்கள், 'ஆண்டவரே எனது முழுநம்பிக்கை' என்னும் அரிய சுலோகத்தைத் தமது விருதுவாக்கியமாகக்கொண்டு, கடந்த 25 வருடங்களிலும், ஆத்துமரட்சகவாஞ்சையுடனும், தேவதோத்திர அபேட்சையுடனும் அயராதுநல் ஆட்சி செய்துவந்ததின்பயனை இன்று யாழ்ப்பாண மேற்றிராசனமானது, குருமார்களாலும் கோவில்களாலும், கன்னிகா மடங்களாலும், சமயஆச்சிரமங்களாலும், அநாதசாலை, வயோதிபர்சாலைகளாலும், மற்றும் சமயப்பிரவிர்த்திகளாலும் மிக விருத்திபெற்று இலங்கையிலுள்ள மேற்றிராசனங்களுள் முதலிடம்பெற்று விளங்குகின்றது.

எம் ஆண்டவர் அவர்கள்

## நூதனவிமானம்

முழுதும் பிளைவுட்டினாலேயே செய்யப்பட்ட விமானம்ஒன்று செக்கோசெலவக்கியாவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும்வழியில் இங்கிலாந்து சேர்ந்திருக்கிறது. இதை பூதத்வசாஸ்திரியான டக்றர் பிராங்க் லீயர் செலுத்திக்கொண்டு வந்திருக்கிறார். இது 3 பேர் ஏறிச்செல்லக் கூடிய விமானம். 105 குதிரைப்பலமுள்ள இஞ்ஜின் கொண்டதும் மணிக்கு 150 மைல்வீதம் பறக்கக்கூடியதுமான இது தொடர்ந்து 600 மைல் செல்லக்கூடியது. ஆஸ்திரேலியா செல்வதற்காக மேலும் ஒரு பெற்றோல் தாங்கி இதில் இணைக்கப்பட்டிருக்கிறது; இதுகாரணமாக இந்த விமானம் ஒரேசமயத்தில் தொடர்ந்து 900 மைல் செல்லும். வைகாசி 13-ந்திகதி இந்த விமானம் ஆஸ்திரேலியாவுக்கு மறுபடி புறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய துணை ஆயரின்

# மேற்றிராணித்துவ சின்னம்

முனை கீழானவோர் முக்கோண வடிவுடைய இச்சின்னம், உச்சியில் ஓர் சிலுவையையும் அதன் ஓர்புறத்தில் அமலோற்பவ மரியநாயகிசபைக் கேடயத்தையும், மத்தியில் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவையும், கீழே சிவப்புநிறப் பிற்களத்தில் ஆட்சிசெய்யும் ஓர் யாழ் வாத்தியத்தையும் கொண்டுள்ளது. இவைகளின் நோக்கங்கள் யாவும் அர்ச். சின்னப்பர் எபேசியருக்கு எழுதிய ஆழ்ந்தகருத்துடைய வார்த்தைகளில் அடங்குவனவாகும். "சமாதான பந்தனத்தில் திவ்வியஇஸ்பிரீத்துவின் ஐக்கியம்." இதுவே உதவி மேற்றிராணிஆண்டவரின் விருதுவாக்கியமுமாகும்.

சின்னத்திலதோன்றும் குறிகளும் அடையாளங்களும் எங்களைச் சாதாரண பார்வைப் பொருள்களினின்று நீக்கிக் கண்ணுக்குப்புலப்படாத இராச்சியத்துக்கு வழிநடத்திச்செல்லுகின்றன. அவைகள் நாம்பேசுவதைப் பார்க்கிலும் பன்மடங்குபழுவாக உரத்துப்பேசுகின்றன. அக்குறிகளின் ஆழ அகலங்களை எடுத்து விவரிக்க வார்த்தைகளோ இல்லை.

எங்கள் இரட்சாபெருமானின் பாடுகளினதும், மாணத்தின்மேல் அவர் கொண்ட வெற்றியினதும் சின்னமாகிய சிலுவையே கிறீஸ்துவர்களின் அறிகுறியாகவும், அவரது ஈருந்த வெற்றியின் உத்தரவாதமாகவுமிருப்பது. ஓர்கால் இழிவுக்கும் அடிமைத்தனத்துக்கும் அறிகுறியாயிருந்த இதேசின்னம், தற்போது மிக்க மகத்துவமுடைய சின்னமாய் விளங்குகின்றது. [illegible]து உரிமையைப்பாதுகாக்க விரைந்துசெல்லும் போர்வீரன் தனது மார்பில் அணிந்துகொள்வது இச்சிலுவைச் சின்னமே. அவன் போரில்வெற்றி கொண்டு மீளுகையில் இச்சின்னம் அவனது விருதின் மேன்மையான இடத்தைக் கொள்ளுகின்றது. அவனது பிரேதக்குழியில் அவனது ஆட்சிக்கு அடைமானமாய்நிற்பது இச்சிலுவைச் சின்னமே. மலைகளின்உச்சிமீதும், எங்கள்மாட்சிமையுடைய ஆலயகோபுரங்களின் சிகரங்கள் மேலும், மிகவும்எளிய குடிசைகள் மீதும் இலங்கிநின்று அவைகளை அழகுபடுத்துவது இச்சின்னமன்றோ. அவவிசுவாசிகளுக்கு நிந்தையும் இடறலுமாயிருக்கும் இச்சிலுவைச் சின்னத்திலேயே எங்கள் இரட்சணியமும், சீவியமும், உத்தானமும் தங்குவனவாகும். ஆகவே இச்சிலுவை நிழலின்கீழ் நாங்கள் நிமிர்ந்து விரைந்து செல்லுவோமாக. இச்சிலுவையடையாளத்தின்பின்னே எங்கள்புதிய மேற்றிராணியாண்டவர் எங்களை வழிநடத்திச்செல்லுவாராக.

சின்னத்தின் பிற்களம், வேதசாட்சியத்துக்கும், பலிக்கும், அனலான நேசத்துக்கும்அடையாளமான சிவப்பு நிறத்தைக்கொண்டுள்ளது. கொல்கொத்தாமலையின் உச்சியில் பீறிட்டோடிய திவ்வியஇரத்தத்தின் நிறம் இதுவல்லவோ! சிலுவையில் அறையுண்டநாதரின்மேல் வைத்த அணைகடந்த அன்பின்பெருக்கால் எல்லாக் காலங்களிலும் வேதசாட்சிகளால் சிந்தப்படும் இரத்தத்தின்நிறம் இதுவன்றோ! இஸ்பிரீத்துசாந்துவின் ஆகமனத்தின்போது அப்போஸ்தலர்கள் மேலிறங்கிய அக்கினிநாக்குகளின் நிறமும் இதுவேயாம். கிறீஸ்துவ வாழ்க்கைக்கோ அன்றேல் மேற்றிராணித்துவ சீவியத்துக்கோ அஸ்திவாரமாயிருப்பது அன்பும் பலியுமே.

புதிய மேற்றிராணிஆண்டவர் அமலோற்பவ மரியநாயகி சபையைச்சேர்ந்தவர். கடந்த நூறுவருடங்களாக இந்தத்திராட்சத்தோட்டத்தில் அயராதுழைத்துவந்த உதாரகுணம் வாய்ந்த பரித்தியாகிகளின் கூட்டத்தில் இவருமொருவர். ஆகவே இவரது சின்னத்தில் அமலோற்பவசபைக் கேடயமும் ஓரிடத்தைப் பெற்றிருக்கின்றது.

ஞானசீவியத்துக்கும், நேசத்துக்கும், வெளிச்சத்துக்கும் உயிராகிய திவ்விய இஸ்பிரீத்துசாந்து தேவனே இச்சின்னத்தின் மத்தியில் வீற்றிருக்கின்றார். இவரே பிதாவுக்கும் சுதனுக்குமிடையிலுள்ள ஐக்கியபந்தனமாயிருக்கின்றார். யோர்தான்நதியிலே சுதனுகியசருவேசுரன்மேலும் செனுக்கொலுவிலே அக்கினிமயமாய் அப்போஸ்தலர்மேலும் இறங்கிவந்த அன்பின் ஆவியானவர் இவரே. கிறீஸ்துவின் மறைபொருளான சரீரத்துக்கு உயிர்தந்து காத்துவைக்கும் பரிசுத்த ஆவியானவர் இவர். திருச்சபையை ஆளும்படி அவரால்தெரியப்படுகின்ற மேற்றிராணிமாரே உயிருக்காதாரமான உறுப்புகளாக அமைக்கப்பட்டு அவர்கள்மூலம் இவ்வுயிர் அவரால் பரப்பப்படுகின்றது.

பரிசுத்தஆவியானவர் அப்பமாகிய சரீரத்துக்கு உயிரைக் கொடுப்பதுமன்றி பலவேறுகூறுகளுக்கும் ஐக்கியத்தையும் அருளுகின்றார். அவர் சற்பிரசாதஅப்பத்தின் கூறுகளுக்குள்ளே ஐக்கியத்தையும், கட்டுப்பாட்டையும், இசைவுப்பொருத்தத்தையும் உண்டு பண்ணிவிடுகின்றார். நாங்கள் எங்களுக்குள் "ஒரேதேவன், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே கடவுளும்பிதாவும், அவரே சர்வத்துக்கும்மேலானவர். சர்வத்துக்கும் ஊடானவர், எங்கள் எல்லார் உள்ளத்திலும் வதிபவர்" என்று சொல்லக் கூடியவிதமாய், ஒரேஆத்துமமும் ஒரே சரீரமும்என்று சொல்லும்படியாய், வகுக்குஞ் சுவர்களைத் தகர்த்து, சமாதானபந்தனத்தினுல் எங்களை ஐக்கியப்படுத்தி, எல்லாவற்றையும் ஒன்ருக்கியவரே எங்கள்சமாதான தேவனுயிருக்கின்ருர்.

யாழானது வாத்தியக்கருவிகளுக்குள்ளே பழமையும் பிரபலியமுமான ஒரு வாத்தியக்கருவியாகும். அது தெரிந்துகொள்ளப்பட்ட சனங்களின் கீதங்களிலே விசேஷமாகப் பாவிக்கப்படுகிறது. அது அசீரியர்களாலும் எஜிப்தியர்களாலும், செல்தியராலும் மிகவும் மதிக்கப்பட்டுப் பாவிக்கப்பட்டது. அதன் இனியதொனியின் இசைவு குறிப்பிடக்கூடியதாகவும் ஒரே சக்தியால் உற்சாகப்படுத்தப்பட்ட ஒரேபட்டியான பாகங்களுக்கிடையே, இருக்க வேண்டிய சீரும், பொருத்தமுமுடையதாகவுமிருக்கின்றது.

பாரம்பரியவரலாறு யாழ்ப்பாணத்தையும் யாழையும் தொடர்வுபடுத்திக் காட்டுகின்றது. அவ்வரலாற்றின்படி யாழ்ப்பாணம், ஓர் குருட்டுக் கவிஞனுக்கு, அவன் தனது யாழில் இசைத்த கீதத்தின் திறமைக்குப் பரிசாக ஒரு அரசனுல் அளிக்கப்பட்டது.

சின்னத்திலுள்ள சித்திரவாக்கியங்கள் யாவும் அர்ச். சின்னப்பர் எபேசியருக்கு எழுதிய அழகியநிருபங்களிலிருந்தே ஊக்கி எடுக்கப்பட்டன. அவற்றின் கருத்துகள்யாவும் "ஐக்கியம்" என்னும் ஒரேமொழியிலே அடங்குவனவாகும். ஐக்கியமே தெய்வீக இலட்சணங்களுக்குள் பிரதானமானது. ஐக்கியமேதேவன் பூமிமீது இயற்றிய சகலவேலைப்பாடுகளுக்கும் ஓர்உகந்த பரீட்சையாகும். மானிடர்மத்தியில் ஒழுங்கும் கிரமமும் சீருஞ் சிறப்பும் நிலவவேண்டின் ஐக்கியமே முக்கியமும் இன்றியமையாததுமாகும். ஐக்கியமே பேதுருஎன்னும் கற்பாறையில் கட்டப்பட்ட கத்தோலிக்குத் திருச்சபையாம். மாட்சிமையுடைய மாளிகையை ஆட்சிபுரியும் சிறந்தசுகுணமாகும். உலகஐக்கியத்துக்காகவே கிறீஸ்துநாதர் கடைசிஇராப்போசன வேளை பிரார்த்தித்துநின்ருர். ஐக்கியமே தேவவரப்பிரசாதத்தின் தீங்கனி—ஐக்கியத்துக்காகவே பரிசுத்த தாயாகிய திருச்சபை உலகம்முழுவதிலும் ஒரேமந்தையும் ஒரே மேய்ப்பனுமாய் ஆகும்வரையும்முனைந்துநின்று போராடுவதாகும்.

---

## விடுமுறை நாள்

யாழ்ப்பாண துணைமேற்றிராணியாரான மிகவந். ஜே. எமிலியானுஸ் பிள்ளை, O. M. I., அவர்களின் பட்டாபிஷேகத்தை முன்னிட்டு இம்மாசம் 23-ந்திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாண மேற்றிராசனத்துள் அடங்கிய சகல கத்தோலிக்க பாடசாலைகளுக்கும் ஓர் விடுமுறைநாள் கொடுக்கப்பட்டிருப்பதாக அறிகிரும்.

---

## எங்கள் இராச தேசிகன்

— அழகு —

1

சந்திரன் போலக் குளிர்ந்தவனே! —ஞான
சாகரம் போலக் கிளர்ந்தவனே!
சிந்தனை சொற்றூய்மை யானவனே! —ராச
தேசிகனே வாழி! காசினியில்

2

நெஞ்சில் உறுதி உடையவனே! —மனு
நீதி தயையன்பு வாழுநெஞ்சே!
பிஞ்சில் குருத்துவ பட்டம்பெற்ருய் —கர்த்தன்
பேறு பெற்ருய் மனம் தேறுதற்கே

3

வீரத் தமிழர் திருக்குலத்தில் —முதல்
மேற்ருணிப் பட்டம் பெறுவதனுல்
ஊரவர் கொள்ளும் மகிழ்ச்சியினைக் —கண்டால்
ஓசைக் கடலும் ஒடுங்கிவிடும்

4

எண்ணற்ற மாந்தரின் உள்ளங்களில் —வாழும்
இன்னமுதே! கலை யின்வடிவே!
மண்ணின் சுகங்களை விட்டவனே —உள்ளம்
மாசற்ற பூங்குள மானவனே!

5

ஆன்ற அறிவுத் தெளிவு கண்டோம் —அர
சாட்சியிலே மிக மாட்சி கண்டோம்
தோன்றும் புதிய பதவியிலே —கணந்
தோறும் இறைவன் துணைபுரிக.

6

முத்துச் சிரிப்பும் கனிமொழியும் —நிறை
மோன வடிவும் உடையவனே!
புத்தம் புதிய சுவைகளெல்லாம் —உந்தன்
பொன்னுரையில் வைப்ப தென்னவிதம்?

7

மாய உலகத்தின் முட்களிலே —தங்கள்
வாழ்க்கை கருக வழிநடந்து
நேயதிருவடி வந்தவர்கள் —நோய்க்கு
நெஞ்சில் அவுடத மாயிருப்பாய்

8

புன்னகை மாமுகம் கண்டவுடன் —துயர்
போக்கிடுவார் துணை யாக்கிடுவார்
என்னகை மாறுகள் செய்வ மென்பார் —உனை
எண்ணி யெண்ணிமனம் இன்புறுவார்.

9

காட்டுப் புலிக்கு நடுநடுங்கி —உங்கள்
கால்நிழல் தங்கிய ஆடுகள்போல்
நாட்டில் சமதர்மத் தீபரவ —உந்தன்
நன்னிழல் தேடுவம் நாமரசே!

10

காவிய மாளிகை போன்றவனே! —ஈழம்
காக்க அரும்பணி செய்தவனே!
தேவி திருமரி செங்கரத்தில் —உங்கள்
சேவை சிறந்திடவாழ்த்துகமே.

---

**திக்கற்ற தையல்**

**ஓர் கத்தோலிக்க தமிழ் நாவல்**

**விலை ரூபா 1-75**

**தபாற்செலவு 30 சதம்**

**தாமஸ்ரோட்றீகோ அன்சன்ஸ்,**

புத்தகவியாபாரிகள்,

கொழும்பு—13.

---

—வடஅத்திலாந்திக் ஒப்பந்தத்தை அங்கீகரிக்கும்படிகோரி அரசாங்கத்தார் கொண்டுவந்ததீர்மானம் காமன்ஸ் சபையில் நிறைவேறியது. சாதகயாக 333 சீட்டுகளும், பாதகமாக 6 சீட்டுகளும் அளிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டவனே! அருளல்வேண்டும்

(ஆசிரியர் K. T. ஞானப்பிரகாசம்)

விருத்தம்

1. ஆராத ஈழமணித் தேவி செய்த
அருந்தவத்தின் பெரும்பயனாய் அம்பொன் னாட்டுப்
பேராத நிதியமெல்லாம் பெற்றுத் தேங்கும்
பெட்பமைந்த யாழ்ப்பாணக் கரம்பன் பூமி
காராள ரணிமரபிற் பிறந்து ஞானக்
கடல்நுழைந்து வானமுதைக் கடைந்தெடுத்துத்
தாராள மாயளிக்கும் எமிலி யானுஸ்
தவமுதல்வற் காண்டவனே! அருளல் வேண்டும்.

2. கண்ணினுமே யினிமை பெற்ற சுதந்தரத்தைக்
கனியெனவே சுவைத்தருளு மிந்தக்காலம்
புண்ணியநந் திருச்சபையும் பொலிந்து தேங்கப்
போற்றுதமிழ் மக்களெலாம் புதுமை பூக்க
எண்ணியவா றீசனுவந் தளித்த செல்வன்
எமிலியான்ஸ் பிள்ளையெனு மேற்ற மன்னன்
பண்ணினிய பரிமளிப்பாய்ப் பட்டஞ் சூட்டும்
பாக்கியநாள் ஆண்டவனே! அருளல் வேண்டும்.

3. வத்திக்கான் பேதுருவின் மனைதா னீங்கு
வந்ததென மூகிற்கணங்கள் வணக்கஞ் செய்யும்
எத்திக்குங் கொஞ்சேஞ்சி மாதா வென்றே
ஏறெடுக்கும் ஆசனக்கோ விலிலே நீதான்
தித்திக்கும் மணிமகுடஞ் சூட்டிச் செங்கோல்
திருக்கரத்தே தாங்கிவருந் தேசு கண்டோம்
புத்திக்கும் எட்டாத எமிலி யானுஸ்
போதமுனிக் காண்டவனே! அருளல் வேண்டும்

4. செங்கதிரோன் இவன் தேசைத் தினமு மள்ளும்
சீதமதி யிவனருளைத் தெவிட்டித் தள்ளும்
பங்கயப்பூ இவன்முகத்தின் பளிங்கைக் காட்டும்
பண்புடைமை யாழ்களெல்லாம் பாடி மீட்டும்
கங்கையிலே யிவன்கருணை கடந்து பாயும்
கற்பகமும் இவன்கரத்தைக் கண்டே சாயும்
அங்கையிலே கிடைத்த நெல்லிக் கனியீ தம்மா
ஆண்டகைக்கிங் காண்டவனே! அருளல் வேண்டும்.

5. பற்றறவே கற்றுணர்ந்த எமிலி யானுஸ்
பாக்கியத்தோன் முன்நிற்கப் பயந்தே முன்னாட்
புற்றிடந்து வால்மீகி முனிவன் போனான்
பொருப்பிடந்தே யகத்தியனும் போயொழித்தான்
முற்றுணர்ந்த சேடனுமே பாரிடந்து
மொய்ம்புமிகு பாதாள மூலையிற் போனான்
உற்றுணர்ந்தே பார்க்கினெதிர் நிற்பார் யார்கொல்!
உயிரனையாற் காண்டவனே! அருளல் வேண்டும்.

6. மந்தைகளை நன்குணர்ந்த ஆயனானான்;
மதிசிறந்த ஆசார்க்கோர் மருந்தே யானான்
சந்ததமும் புடைசூழுங் குரவ ருக்கோர்
தலைசிறந்த சோதரனாய்த் தாங்க லானான்
செந்தமிழர் சிங்களவர் சமூகம் வாழச்
சேர்த்திணைக்குஞ் சேதுவெனத் திகழ லானான்
அந்தமிலான் தெரிந்தெடுத்த எமிலியானுஸ்
அம்மை யப்பற் காண்டவனே! அருளல் வேண்டும்.

## யாழ்ப்பாண முதற்றமிழ் ஆயருக்கு

## —அஞ்சலி!—

முத்திவழி காட்டுவதில் முதல்மையான
மோனகுரு எமிலியானுஸ்பிள்ளை இவர்
தத்துவனாய்த் தகுதியுடன் யாழூர்தன்னில்
தமிழரிலே தனிமூப்பாம் தகைமை பெற்றார்
எத்திசையும் இசைபெருகி இன்பேகாட்டி
இமயமென இலங்கி யருள் புரிகுவோயே!
உத்தமருள் உத்தமனே! உமைப் புரந்தோம்!
ஊழிபல ஊழியென ஒளிருவாயே!

மண்கண்ட யாழ்ப்பாண மறைகண்ட மன்னவனே!
கண்கண்ட தெய்வமே! கலைகண்ட கண்ணியனே!
எண்கொண்ட ஏந்தலே! ஏற்றமுறு எமில்அன்னாய்!
பண்கொண்ட இன்சொல்லே! பணிவுடனே அஞ்சலித்தோம்!

மதிகலங்கா மந்திரியே! மாறுபடா மாலுமியே!
கதிகலங்காச் சாரதியே! காரிருளின் வெண்மதியே!
சுதிகலங்கா யாழொலியே! சுவைகுறையாச் சுசிகரமே!
நிதியுறைந்த தனித்தலைவா! தாள்பணிந்து அஞ்சலித்தோம்!

செல்வமெனும் பொருளெலாம் சேர்த்திருக்கும் பெட்டகமே!
நல்வினைக்கு நாயகனே! நடுக்கமிலா வீரவானே!
கல்விதருங் கலைக்கடலே! மறைப்படையின் சேனபதியே!
சொல்வதற்கு வேற்றியோம் சோபனமே! வாழி!! வாழி!!!

## புதிய ஆயருக்கு என்னவேணும்?

— ஆனந்தக்களிப்பு —

புதிய ஆயருக் கென்ன வேணும் — என்றால்
பொதுவி லவர்க்கெம் ஆசிவேணும்.

அனைவரின் ஆதரவும் வேணும் — அப்போ
ஆயர் புகழ் உறுவர் காணும

ஈரமுடைய நெஞ்சு வேணும் — இதிலே
இனமும் குலமும் போகவேணும்

ஆட்சித்திறமை பெற வேணும் — அதிலே
அனுபவ மதிகமாய்ப் பெறவேணும

சுகபெலம் பெறவேணும் — மேலும்
தூய்மையும் ஆண்மையு முறவேணும்

கட்டளை யவர் சொன்னால் — கொடுக்குக்
கட்டியே ஏகுவீர் அவர் பின்னால்

தரித்திருந் தாண்டிட வேணும் — எவரும்
துதிக்கவும் மதிக்கவும் பார்த்திட வேணும்

திருமறை செழித்திட வேணும் — அதனால்
பெருமித வாழ்வுநாம் பெற்றிட வேணும்

கல்விக் குறைகளெல்லாம் தீரும் — இவர்
கருதிய வழிபுகின் கனலாபம் சேரும்.

அரசியல் தலைவரும் தொழுவார் — வந்து
அவருடை அனுமதி வேண்டிக்கால் விழுவார்.

## உறுதிப்பூசுதலும் யூபிலிவிழாவும்

நாவாந்துறை பரந்தவயல் வெளி, பச்சைப்பசேலென்ற தென்னஞ்சோலை, நீலக்கடல், பல அத்திவாரமிடப்பட்டுக் குறையான கட்டிடங்களின் மத்தியில் சிறியகுருமனை, பரலோகமாதாவின் தற்காலிக அலங்கரிக்கப்பட்ட புதிய சிறு ஆலயம், முன்றிலில் சிங்காரமான பந்தல், தோரணதுவசங்களாலும் மின்சார தீபங்களாலும் தேசோமயமாய் விளங்கிக் கொண்டிருந்தது.

1. முதல்நன்மை:– 15-5-49, ஞாயிற்றுக்கிழமை காலை 7-00 மணியளவில் ஒலிபரப்பிசகிதம், பாடகர் குழாந்துணைபுரிய கட்டளைச்சுவாமியார் V. R. தார்சீசியஸ் அவர்களால் பாடற்பூசை நிறைவேற்றப்பட்டது. வண. Z. N. குரூஸ் சுவாமியார் அவர்களால் "நீங்கள் வாங்கிப் புசியுங்கள்" எனும் மகுடங்கொண்ட அரியதோர் பிரசங்கம் சொல்லப்பட்டது. 65 சிறுவர் சிறுமிகள் சீவியஅப்பத்தை முதன்முறை பெற்றனர். பிள்ளைகளின்மேல் தேவாசிவிநம்பிப் பெற்றோரும்மற்றோருமாக 400-க்கு மேற்பட்டோர் தேவநற்கருணை உட்கொண்டனர். பூசை முடிவில் குருமனையில் கட்டளைக்குரவரால் பிள்ளைகட்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

2. உறுதிப்பூசுதல்:– மாலை 5-00 மணியளவில் 170 சிறுவர் சிறுமிகளும், வளர்ந்தோரும் அணிவகுத்து ஆலயத்தில் அமர்ந்திருந்தனர். வண. கட்டளைக்குரவரும், பலகுருமாரும், பெருந்திரளான கிறீஸ்தவர்களும் ஆண்டவரின் வருகையை ஆவலுடன் காத்துக் கொண்டு வாயிலில்நின்றனர். அதிவந்திக்கத்தக்க ஆண்டவர் அவர்களும் அதிவண. மூப்புச்சுவாமியார் அவர்களும் மோட்டோர் இரதத்தில் நின்று இறங்கினார்கள். கட்டளைக்குரவருங் குருமாரும் ஆண்டவரை வரவேற்று ஆசரித்தனர். கிறீஸ்தவர்கள் இருமருங்கும் முழந்தாளமர்ந்தனர். ஆண்டவர்கள் ஆசீர்வதித்து ஆலயத்தை அடைந்து உறுதிப்பூசுதலெனும் தேவதிரவிய அனுமானத்தை நிறைவேற்றினர். பின் வண. Z. N. குரூஸ் சுவாமியார் அவர்களால் மனவருட்சிக்குரியதோர் பிரசங்கம் சொல்லப்பட்டது.

3. யூபிலிவிழா:– ஆண்டவரும் குருமாரும் அலங்கரிக்கப்பட்ட கோவில் முன்றிலில், உயர் ஆசனங்களில் அமர்ந்தனர். மாலைகள்சூட்டப்பட்டன. மாணவர்களால் வரவேற்பு, நலம்புனைந்துரைத்தல், ஆசியிரத்தல் ஆதியகீதங்கள் படிக்கப்பட்டன. வாழ்த்துப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டன. பரிசுத்தகொஞ்சேஞ்சி மாதாவின் கட்டிடநிதித் தெட்சணைகள் சமர்ப்பிக்கப்பட்டன. ஈற்றில் மகாமேன்மைதங்கிய ஆண்டவர் அவர்கள்எழுந்து இனியதமிழில் சமாதானம், ஒற்றுமை அவைகளின் நன்மைஎன்னும் விடயங்களை அடக்கிப் பலஉதாரணங்களுடனும், பாடசாலைப்பிள்ளைகள், தாய்தந்தையர்கள்கடமை, அரசாங்க உத்தியோகம் கிராமமுன்னேற்றம்பற்றியும் ஓர் சிறந்த அறிவுரை நிகழ்த்தித் தமக்களித்த தெட்சணைக்கு நன்றி கூறித் திருக்கரஆசி ஈந்தருளினார். பின்னர் குருமனையில் உறுதிப்பூசுதல் பெற்றபிள்ளைகளுக்குப் பரிசளிப்புஆண்டவரவர்களால் வழங்கப்பட்டது. மேன்மைதங்கிய ஆண்டவர் அவர்கட்கும், சமூகமானகுருமாருக்கும் கிறீஸ்தவர்கள் உபயத்தில் வண. கட்டளைச் சுவாமியார் அவர்களால் இரவுவிருந்தளிக்கப்பட்டுப் உறுதிப்பூசுதலும், விழாவும்முடிவெய்தின.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதய இரக்கத்தினாலும், அர்ச். நற்சகாயமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். தெரேசம்மாள், அர்ச். அந்தோனியார், அர்ச். ஆரோக்கியநாதர் இவர்களின் வேண்டுகோளினாலும் நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

J. S.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ச். பிலிப்புநேரியார் திருநாள்

செம்பியன்பற்று

இத்திருநாள் வழமைப் பிரகாரம் இம்மாசம் 17-ந்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 26-ந் திகதி காலை திவ்விய பூசையோடும் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்தோடும் முடிவடையும்.

யாத்திரிகளுக்கு வேண்டிய சகல வசதிகளும் வழமைபோல் செய்யப்படும். எவராவது கோவில் வளவுக்குள் மெழுகுதிரி வியாபாரஞ் செய்யக் கூடாது.

S. A. Gnanapragasam,<br>
செம்பியன்பற்று, கட்டளைக்குரு.<br>
17 - 5 - 49.

---

## வேதப் புத்தகங்கள்

| | விலை சதம் |
|---|---|
| 1. விண்பயம் என்? | 30. |
| 2. தியாகசிறுவன் | 30. |
| 3. அகதிகளின் அன்னை | 20. |
| 4. பலனுள்ள சிறுசெபங்கள் | 15. |

தபாற்செலவு வேறு.

சிறியகட்டுரைகளுடன், தெள்ளிய நடையில் எழுதியது. சகலரும்வாசித்து பயனடையக்கூடிய அரியபுத்தகம்.

இயற்றியவர் :<br>
J. M. நிக்கோலாஸ் சுவாமி,<br>
தூத்துக்குடி.

கிடைக்குமிடம் :<br>
மரியாயின்சேனை,<br>
அர்ச். அந்தோனியார் தேவாலயம்<br>
கொச்சிக்கடை,<br>
கொழும்பு 13.

இன்னும் மாதந்தோறும் வெளியாகும் திருஇருதயதூதன், சத்தியபோதினி, நல்லாயன், ஞானதூதன் பத்திரிகைகளும் கிடைக்கும்.

விபரங்களுக்குஎழுதவும்.

---

## விண்ணப்பம்

சங்கையுள்ள கத்தோலிக்கர்களே, மற்றும் பிரியமுள்ள நண்பர்களே ;

என்வாழ்நாளின் பெரும்பாங்கான காலம் என் உயிர்த்துணையாய் வைத்திருந்த அரியபொருளாகிய என் செபமாலையை 26-4-49-இல் ஓர் பிரயாணச் சமயம் இழந்துவிட்டேன். இதைக் கண்டு எடுத்தோர் எவராயினும் பரிசுத்த செபமாலைநாயகியின் நாமமகிமைக்காக எனக்கு அனுப்பிவைக்கும்படி மாதாவின்பேரால்மன்றாட்டமாய்க் கேட்கின்றேன். ஒலிவமணி ; மாசச்சிலுவையில் லாக்கிரி மெழுகிடப்பட்டதடம், வெள்ளிக்கம்பி மூலைவரோணிக்கம், வெள்ளிக்கட்டு, இடையில் ஓர் வரோணிக்கம் முதலியவைகளே என் செபமாலையின் குறிப்புகள். இன்னும் இதனை ஆனைக்கோட்டைக் கட்டளைக் குருவராகும் வண. V. R. தார்சீசியுஸ் O. M. I., சுவாமியார் அவர்களிடம் அனுப்பினாலும் பெற்றுக்கொள்வேன்.

எம். பி. அருளப்பு<br>
நவாலிதெற்கு,<br>
மானிப்பாய்.

---

## ஜி. ஸி. எம். ஜி.பட்டம்

இலங்கைக் கவர்னர்–ஜெனறலாகநியமிக்கப்பட்டுள்ள சோல்பெறி பிரவுக்கு ஜி. ஸி. எம். ஜி. என்ற உயர்ந்தபட்டத்தை மன்னர்பிரான் அளித்திருக்கிறார். இலங்கை டொமினியனின் கவர்னர்–ஜெனறல் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளதின் விளைவாக இந்தப்பட்டம் சோல்பெறிபிரவுக்குவழங்கப்பட்டிருக்கிறது. சோல்பெறி கவர்னர்–ஜெனறல் பதவியை ஏற்பதற்கு ஆடிமாதத்தில் இலங்கைக்குப் புறப்படும் முன்பு, தமக்களிக்கப்பட்ட புதியபட்டத்தின் சின்னங்களை மன்னரிடமிருந்து பெறுவாரெனத் தெரிகிறது.

### மற்றேரு வைத்தியகல்லூரி

கொழும்பிலே போதிய இடவசதியில்லாததால்இலங்கைச்சர்வகலாசாலையின் வைத்தியப்பகுதிக்கு மாணவர் சேர்த்துகொள்வது மிகவும் கஷ்டமாக இருக்கும்போலத் தெரிகிறது. பேராதனையில் ஒரு ஆஸ்பத்திரியையும் வைத்தியப்பாடசாலையொன்றையும் அமைப்பதற்கு அரசினர் முடிவுசெய்தாலன்றி இக்கஷ்டத்தைப் போக்கமுடியாது. மற்றொரு வைத்தியக் கல்லூரிஸ்தாபிப்பதுபற்றிய விஷயம் மந்திரிசபையின் ஆலோசனையிலிருந்துவருகிறது. பேராதனையில் மற்றொரு வைத்தியக்கல்லூரிஸ்தாபிக்கப்படும்வரை முதல்வைத்தியப் பரீட்சையில்தேறும் மாணவருக்கும் இங்கு இடங்கொடுக்கலாமென்று உத்தரவாதமளிக்க முடியாதென்று சர்வகலாசாலைசங்கம் அதன் 1949-ம் வருத்திய அறிக்கையில் கூறியிருக்கிறது. சர்வகலாசாலையில் வைத்தியம் படிக்க அனுமதிகோரும் மாணவரின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது.

### மரணதண்டனை

கழுத்துறை மகலாந்தாவையில் கடந்த கார்த்திகைமாதம் 27-ந்திகதி தன் சொந்த 12 வயது மகளைக் கத்தியால் வெட்டிக்கொலை செய்ததாகக் குலப்புடி சார்டின் என்பவன்மீது குற்றம்சாட்டிய வழக்கு விசாரணையின் இறுதியில் நீதிபதி திரு. கிறேஷியன் எதிரிக்கு மரணதண்டனை விதித்தார் யூரிமார் ஏகமனதாக எதிரி சார்டின் குற்றவாளியெனமுடிவுசெய்தனர். தன் சகோதரன்மீது கொலைக்குற்றத்தைச் சாட்டவேண்டுமென்ற நோக்கத்துடன் எதிரி இக்கொலை புரிந்ததாக அரசாங்க தரப்பில் எடுத்துச்சொல்லப்பட்டது. கொலைநடந்த சமயம் எதிரி புத்திதிவாதீனத்துடன் இருக்கவில்லை என்றுஎதிரி தரப்பில்வாதிக்கப்பட்டது

### 2 மணிநேரத்தில் 908 மைல்கள்

ஹாக்கர்கம்பெனியைச்சேர்ந்த 27 வயதுடைய விமானியான திரு. நெவைல் டியூக் லண்டனிலிருந்து ரோமாபுரிக்கும் அங்கிருந்து காரச்சிக்கும் குறுகியகாலத்தில்பறப்பதற்காக இன்று 12-ந்திகதி கிளம்புகிறார். பாகிஸ்தான் அரச விமானப்படைக்காக இவர் ஒரு யுத்தவிமானத்தைக் கொண்டுசெல்கிறார். லண்டனுக்கும் ரோமாபுரிக்கும் இடையிலுள்ள 908 மைல் தூரத்தை 2 மணிநேரத்தில் பறக்க திரு. டியூக் உத்தேசித்திருக்கிறார்.

### உயிலங்குளக் கடிதம்

#### சேபமாலைமாதாவின் ஞாபகதினம்

உயிலங்குளத்திற்கும் அதன் அயற்கிராமங்களுக்கும் சேர்ந்தகிறீஸ்தவர்கள் சென்றபுதன் கிழமை 4-ந்திகதி மேற்படிதினத்தை ஆடம்பரமாக அனுசரித்தார்கள். கள்ளியகட்டைக்காட்டில் மருதமடுச்செபமாலை மாதாவின் திருச்சுரூபம் முற்காலத்தில் கொஞ்சநாட்கலாகத் தங்கியிருந்ததென்று சரித்திரத்தில் காணுகிறோம். இவ்வூரிலிருந்து தேவதாயாருடைய சுரூபத்தை அழகிய சரோலையில் வைத்துச்சுற்றுப்பிரகாரமாக இம்மீசாமின் ஆசனக்கோவிலான உயிலங்குளம் சம்பேதுருவார் ஆலயத்துக்குக் கொண்டுவந்தார்கள் கிறீஸ்தவர்கள். உயிலங்குளக் கோவில்வீதிச்சந்தியில் மாதாவை வரவேற்று திருச்சடங்குகளின் கருத்தை விளக்கினார் அதிவண. எஸ். பீற்றர்சுவாமிகள். சம்பேதருவார் ஆலயத்தை அடைந்தும் பாவசங்கீர்த்தனத்தைப் பற்றி அமிர்தமான பிரசங்கம். பாவசங்கீர்த்தனங்கேட்க நான்கு குருப்பிரசாதிகள் சமுகமாயிருந்தனர். பின் இரவு 11 மணியளவில் மோட்சானந்த காரணிக்கங்களை விளங்கப்படுத்தி அதிவண. மூப்புச்சுவாமியாரே செபமாலைத்தியானத்தை நடாத்தினர். கிறீஸ்தவர்கள் மாத்திரமல்ல பிறசமயத்தவர்களும் பிரசங்கங்களைக்கேட்க வந்திருந்தனர். இராப்பூசைபாடப்பட்டது. பூசையின்பின் விடியும் வரைக்கும் விசுவாசிகள் செபமாலை ஓதிக்கொண்டு விழிப்பிருந்தார்கள்.

வியாழக்கிழமைகாலைபூசை. அதன்பின் சுற்றுப்பிரகாரமாக மாதாவை கள்ளிய கட்டைக்காட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். அங்குபாடற்பூசைவேளை மாதாவுக்குச் சென்றவருடஞ்செய்த காணிக்கையைப் புதுப்பித்து செபமாலைப்பத்தியை அனுசரிக்க முன்னிலும் அதிக முயற்சிசெய்ய வாக்குப் பண்ணி விடைபெற்றுச்சென்றார்கள். சுற்றுப்பிரகாரமும் இராவிழிப்பும் மற்றுஞ்சடங்குகளும் தவப்போக்குக்குரியதாயிருந்தன. மாதாவின்திருவருள் எல்லோருக்கும்கிடைப்பதாக.

#### தலைமையாசிரியர் பிரியாவிடை

உயிலங்குளப் பாடசாலையில் சென்ற ஐந்து வருடங்களாகத் தலைமைஆசிரியராக விளங்கிய திரு. எஸ். எஸ். கூஞ்ஞு அவர்கள் மாற்றப்பட்டிருப்பதையறிந்த இவ்வூர்வாசிகள் மேற்படி ஆசிரியருக்கு ஓர்பிரிவுபசாரம் நடத்தினர்கள். சென்ற வியாழக்கிழமைபின்னேரம் கோயில்வளவில் குவிந்திருந்த சனத்தொகை, உபாத்தியார்மாட்டு அவர்கள் கொண்டிருந்த அன்பையும் பற்றுதலையும் காட்டத்தக்கதோர் சான்றாயிற்று. கட்டளைக்குரவர் தலைமையில் பிரிவுபசாரவிழா நடந்தது. அவ்வமயம் கோயில் மூப்பர் திரு. பிலிப்பு வாழ்த்துப்பத்திரம் படித்தார். திரு அந்தோனி என்பவர் எல்லோர் பேராலும் பொற்கிழி வழங்கினார். தலைமைஆசிரியருடைய சேவையையும், நற்குண நற்சீலங்களையும்பாராட்டி வண. கட்டளைச் சுவாமியாரும், புதியதலைமை ஆசிரியர் எஸ். செபமாலை குரூஸ், உதவிஆசிரியர் எம். சுவாம்பிள்ளையவர்களும் சொற்பொழிவு நிகழ்த்தினர். பள்ளிச்சிறுருடையபாட்டு, நடனங்களுடன் விழா இனிதே முடிவெய்தியது.

—கடிதர்

---


## திருச்சுரூபங்கள்! — — திருச்சுரூபங்கள்!!

ஐரோப்பாவிலிருந்து தருவிக்கப்பட்டன.

அழகும் உறுதியும் உள்ளனவாய், கவர்ச்சிமிக்க நிறங்கொண்டனவாயுள்ள

**கிறீஸ்து இராசா சுரூபங்களும் இருதய ஆண்டவர் சுரூபங்களும்**

விற்பனைக்கிருக்கின்றன.

விலை : 12 இஞ்சி ரூ. 15/- 16 இஞ்சி ரூ. 25/-<br>
20 இஞ்சி ரூ. 35/- 24 இஞ்சி ரூ. 55/-

பார்சல் செலவு பிரத்தியேகம்

பழைய சுருபங்களுக்தும் வர்ணம் தீட்டிக்கொடுக்கப்படும்.

☞ விபரங்களுக்கு எழுதவும்

**தோமஸ் ரெட்றிக்கோ அன் சன்ஸ்,**<br>
சுரூப இறக்குமதியாளர்,<br>
கொழும்பு 13.

Phone : 3489 — T'grams : "Religart"


---

## கத்தோலிக்க சமாச்சாரம்

### வத்திக்கான் நியமனம்

சமீபத்தில் நடந்தேறிய அந்தரங்க கூட்டமொன்றில் பரிசுத்தபாப்பாசர் மகாவந். கருதினல் மசிமோமசிமிஆண்டவர் அவர்களை "கமர்லெங்கோ" உத்தியோக பதவிக்கு உயர்த்தி இருக்கிறார். "கமர்லெங்கோ," உத்தியோகத்தை வகிப்பவர் பாப்பரசருக்குச்சொந்தமான ஆஸ்திகளை நிர்வகித்து அவற்றிலிருந்துவரும் வருமானத்தையும் அறவிடுபவராவர். பாப்பரசர் நற்கதி அடையும்பொழுது அடுத்த பாப்பரசர் தெரியப்படும்வரை "கமர்லெங்கோ" என்பவரே கருதினல்மார் சங்கத்தலைவராகவிருந்து பாப்பரசரைத்தெரியும் அந்தரங்ககூட்டத்தைக் கூடுவித்துப் பாப்பரசரைத் தெரிவுசெய்யும் பொறுப்பையும்ஏற்று நடத்துவார். இப்பொழுது இவ்வுத்தியோகத்துக்கு நியமனம்செய்யப்பட்ட மசிமிஆண்டவர் 72 வயதான ஓர் இத்தாலியர். நீதிசாஸ்திரத்தில் சிறந்தநிபுணர். 1946-ம்ஆண்டு தொடக்கம் ரோமைத்தலைமை நீதிஸ்தலத்துத் தலைவராகக் கடமைஆற்றியுள்ளார்.

### பரிசுத்தவருட திருயாத்திரை

பரிசுத்தவருடக் கொண்டாட்டத்து மத்தியநிர்வாகசபைக் காரியதரிசியாகிய மொஞ்சிஞ்ஞோர் சேர்ஜியல் பிஞ்ஞெதோலி ஆண்டவர் அவர்கள் அமெரிக்காவில் பிரயாணஞ்செய்து 22 நாடுகளைத் தரிசித்திருக்கிறார். அவர் அறிவித்தபடி வட, மத்திய, தென்அமெக்க நாடுகளிலுள்ள பலஅரசாங்கங்கள் பரிசுத்தவருடத் திருயாத்திரைக்கு ரோமைநகர்செல்லும் யாத்திரீகர்களுக்குக் குறைந்தவிகிதத்தில் பிரயாணச்செலவும் பணமாற்று உதவிகளும் செய்வதாக ஒப்புக்கொண்டுவிட்டனவாம். கனடாவில் மாத்திரம் நூற்றுக்குமேற்பட்ட யாத்திரீகர் கூட்டங்கள் நிறுவப்பட்டுள்ளனவாம். யாத்திரீகர்களுடைய வசதிகளைக் கவனிக்கும்பொருட்டு 20 நாடுகளில் நிர்வாகசபைகள் அமைக்கப்பட்டுவிட்டனவாம்.

---

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residin at 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, May 12 1949.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org